இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 37 | பிப்ரவரி | 2024 | Vol.: 9 | Issue: 37 | February | 2024

# கவிஞர் வெள்ளியங்காட்டான் கவிதைகளில் மனிதம் Kaviñar veḷḷiyaṅkāṭṭāṉ kavitaikaḷil maṉitam

**முனைவர் ந.இராஜேந்திரன்**
தமிழ் - உதவிப்பேராசிரியர், பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், 9Assistant Professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore – 641 014.)
nrajendran@psgcas.ac.in, Ph.No - 9597536324.

ORCID ID: https://orcid.org/0000-0001-7113-9374

DOI: **10.5281/zenodo.10714228**

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வில் அடிப்படை வாழ்வியல் முறைகளான, பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ்வது, நல்ல சிந்தனை ஊட்டுவது, பிறர் உழைப்பைத் திருடாமல் வாழ்வது, சமத்துவ வாழ்வை ஏற்றுக்கொள்வது, ஆசையின்றி வாழ்வது, அடிமைத்தனம் இல்லாமல் வாழ்வது, தீண்டாமையின்றி வாழ்வது போன்ற கருத்துகளைக் கவிஞர் வெள்ளியங்காட்டான் தன் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ள பாங்கினை எடுத்துரைக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

**Abstract**

This article highlights the concepts of obtaining basic human life methods, living without harming others, good thinking, living without stealing others' labour, accepting an egalitarian life, living without desire, living without slavery, and living without untouchability from the poems of poet Velliyankaattan.

**திறவுச்சொற்கள் Key Words**
கவிஞர் வெள்ளியங்காட்டான், மனிதம், சிந்தனை, சமத்துவ வாழ்வு, அடிமையற்ற வாழ்வு, தீண்டாமை, Poet Velliyankattaan, Humanity, Thought, Equality Life, Non-slavery Life, Untouchability

"மறைந்தாலும் வாழுகிறார் நூல்களில் வெள்ளியங்காட்டான். கவிஞர் வெள்ளியங்காட்டான் கவிதை பாடும்பொழுது மரபுக்கவிஞர், காவியம் படைக்கும்பொழுது புரட்சிப்பாவலர், கட்டுரைகள் எழுதும்பொழுது ஆய்வியல் அறிஞர், கதைகள் கூறும்பொழுது பகுத்தறிவுச் சிந்தனையாளர், புதினங்கள் படைப்பில் இணையில்லா நாவலாசிரியர், கடிதங்கள் எழுதும்பொழுது அனுபவ ஊற்று, மொழிபெயர்ப்புகள் செய்யும்பொழுது மொழியியல் வல்லுநர், பொன்மொழிகள் சொல்லும்பொழுது தத்துவஞானி, மொத்தத்தில் பன்முக எழுத்தாளர்" என்பார் வீ.கே.கார்த்திகேயன் (15.05.2017). இத்தகைய தமிழ் அறிஞர் கவிஞர் வெள்ளியங்காட்டானின் கவிதைகளில் உள்ள மனிதம் குறித்த சிந்தனைகளை ஆராய்ந்து எடுத்துரைக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

## மனிதம்

மற்றவர்களின் வலியைத் தன் வழியாக உணரத் தொடங்கும்போதும் அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முன்வரும்போதும் தான் மனிதம் பிறக்கிறது.
"மனிதம் என்பது எந்தச் செயலிலும் மனித இனத்திற்குக் கேடு விளையாதபடி செயல்படுதல். பொதுவாக விலங்குகள் எல்லாம் தத்தம் இனத்திற்குக் கேடு விளைவிப்பதில்லை. அதுபோன்ற செயல்கள் எதுவும் செய்வதில்லை சிந்திப்பதில்லை. சிந்திக்கத் தெரிந்த மனிதர்கள் மட்டுமே சுயநலத்தால் பிற மனிதர்களுக்குக் கேடு நினைப்பதும், விளைவிப்பதுமுண்டு அப்படி கேடு நினைக்காது செயல்படுவதே மனிதம்" என்கிறார் பிரேம்ஜான் சந்திரசேகரன் (08.02.2008).

## உணவு

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை என்ன? உணவு, உடை, இருப்பிடம். இம்மூன்றும் ஒரு மனிதனுக்குக் கிடைக்காதபொழுது மனிதத் தன்மையோடு இருந்த கவிஞன் எழுத்துக்களின்வழிப் பொங்கி எழுகிறார்.

**"குச்சில் குடிசையில் கூர்ந்த இருட்டினில்**
**குடிக்கக் கூழுமில் லாமல் குமுறியே**
**அச்சோ ஆ! என்றழுது வடித்திடும்**
**அவல மக்கள்கண் ணீரைத் துடைக்கவே" (கடமை, ப.102)**

என்ற வரிகள் கவிஞர் வெள்ளியங்காட்டானின் ஆழ்மனத்திலிருந்து தோன்றியவை. மேலும் அப்படிப்பட்ட மக்களுக்கு நம்மால் எதையும் செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்துவதாக மேற்குறித்த கவிதை வரிகளின் கருத்து அமைகிறது. இச்சிந்தனையானது சமூகச் செயல்பாட்டாளர் தோழர் ஜீவாவிற்கும் இருந்துள்ளது என்பதை,

**"காலுக்குச் செருப்பு மில்லை**
**கால்வயிற்றுக் கூழுமில்லை**
**பாழுக் குழைத்தோமடா - என் தோழனே**
**பசையற்றுப் போனோமடா" (ஜீவாவின் பாடல்கள், 198:21)**

என்கிறார் தோழர் ஜீவா. மக்களின் வறுமை நிலையையும் பசிக் கொடுமையையும் பார்த்துவிட்டு மனம் நொந்து பாடுகிறார். ஒரு மனிதனுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளும் அடிப்படைத் தேவைகளும் எங்கேயெல்லாம் கிடைக்கவில்லையோ அங்கேயெல்லாம் கவிஞரின் குரல் எழுத்தின் வழியாக உரிமைக்குரலாய் ஓங்கி ஒலித்துள்ளது. ஏனென்றால், பசி எவ்வளவு கொடுமையானது என்பதை இருவரும் தமிழ் இலக்கியங்கள் வழிப் படித்தும், வாழும் மனிதர்களைப் பார்த்தும் தெரிந்திருக்கிறார்கள்.

பசியால் வருந்துபவரின் இரங்கத்தக்க நிலை எப்படி இருக்கும் என்பதை மணிமேகலை காட்சிப்படுத்துகிறது. குடிச்சிறப்பை மறப்பான், போற்றி ஒழுகிய ஒழுக்கத்தை மறப்பான், காக்கும் கடமை மறந்து, மனைவி, குழந்தை என்போர் பெருமிதமுறச் செய்ததை மறந்து அவர்களுடன் மற்றவர் வாசலில் நிற்கச் செய்யுமாம். மானம் துறக்கும் நிலை இது.

**"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி"**
**(மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, 76-80)**

என்பதை மணிமேகலை எடுத்துரைக்கிறது. மேலும், ஒரு நாடு எவ்வாறு இருக்க வேண்டும் இருந்தால் அது நல்ல நாடு என்பதை வள்ளுவர்,

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு" (குறள்.734)**

இவ்வாறு கூறியிருக்கிறார். பசியும், பிணியும், பகையும் இந்த மூன்றும் இல்லாமல் இருப்பதே நல்ல நாடு என்கிறார். இக்கருத்தை ஆழமாக உள்வாங்கிக்கொண்ட கவிஞர் வெள்ளியங்காட்டான் நாடு சிறக்க வேண்டுமெனில் மக்களின் பசிக்கொடுமை நீங்க வேண்டும். ஆனால் இங்குக் குடிக்கக் கூழ்கூடக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தைக் கவிதை வரிகள் மூலம் பதிவு செய்திருக்கிறார்.

### இருப்பிடம்

ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் இருப்பிடம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. இந்தத் தேவைகள் கிடைக்காத மக்களின் வாழ்க்கையை மனம் நொந்து பதிவு செய்திருக்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான்.

**"நாடு முழுவதும் வீடு கட்டி**
**நகர்க ளாக்கித் தந்தவர்**
**கூடி வாழக் குடிலு மின்றிக்**
**கும்பி வேக நொந்துபோய்**
**உழைப்ப வர்க்கு மட்டு முலகம்**
**உரிமை யுள்ள தென்றுதான்**
**எழுப்பு கின்ற வோசை எங்கும்**
**இடிமு ழங்கு தின்று தான்"        (உரிமை : ப.99)**

நாடு முழுவதும் மக்களுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்த கூலித் தொழிலாளி அவன் இருப்பதற்கு வீடு இல்லையே என்பதை எண்ணி எண்ணிக் கவிஞர் வருத்தப்படுகிறார். பிறருக்காக வருந்துதல் என்பது மனிதப் பண்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது. இப்பண்புடைய கவிஞர் மனிதருள் மாணிக்கமாக விளங்குகிறார்.

**மனிதனை மனிதன் துன்புறுத்தும் செயல்**

**"வேடிக் கைவிளை யாடல் முடிந்ததும்**
**வேணு கானமும் நாண இசைப்பதும்**
**காடு முழுவது முள்ள வுயிரினம்**
**காது குளிரப் பருகிக் களிப்பதும்**
**அன்றில் லாம லடங்கிக் கிடந்ததால்**
**வேயின் கூனல் முதுகி லமர்ந்திசை**
**விரும்புந் தூக்கணங் குருவியு மாவலாய்**
**நேய மான குயிலை நெருங்கியே**
**நேர்ந்த தென் னெனக் கேட்டது நேசஇத்**
**தூய வுள்ளமில் லாக்கொடுங் காக்கையால்**
**துன்ப முற்றனம் என்றதுப் பூங்குயில்" (துன்பமுற்ற குயில், ப.139 140)**

காட்டில் வாழுகின்ற எத்தனையோ உயிரினங்கள் குயிலின் இன்னிசையைக் கேட்டு மகிழ்கின்றன. ஆனால், இன்று குயில் சோகத்துடன் இருப்பதைக் கண்ட தூக்கணாங்குருவி ஏன் இவ்வளவு சோகமாகத் துன்பமுற்று இருக்கிறாய் எனக் கேட்க, குயில் காக்கை என்னைத் துன்பப்படுத்துகிறது என்கிறது. இந்தச் செயல் போன்று தான் உலகத்தில் நல்லது செய்யும் மக்களைத் தீயவர்கள் துன்பப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்தச் சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் வரிகளாக அமைகிறது.

**சிந்தனை செய்**

"நீ எதுவாக மாற விரும்புகிறாயோ அதுவாக மாறுவாய்" (2023:20) என்பது ஆபிரகாம் லிங்கனின் கூற்று. இக்கூற்றினை நன்றாக உணர்ந்துகொண்ட கவிஞர் வெள்ளியங்காட்டான் மனிதனைச் சிந்திக்கத் தூண்டுகிறார். காரணம் சிந்தனை செயலில் இறக்கும், செயல் வெற்றியைக் கொடுக்கும் என்பதால்,

**"சிந்தனை செய்வதுதான் - நமது**
**செயல்களில் சிறந்த செயல்!**
**……………………………………**
**நிந்தனை நீங்கிடவும் நிலத்தில்**
**நெறிமுறை நின்றிடவும்**
**சிந்தனை செய்வதுதான் - சிறந்தோர்**
**செய்திடும் முதல் செயலாம்"        (சிந்தனை, ப.162)**

என்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான். சிந்தனைதான் ஒரு மனிதனை முழுமையாக்குகிறது. அவன் சிந்தனைதான் அடுத்த சந்ததிகளுக்கு வழிகாட்டும் கைகாட்டியாக அமைகிறது. ஐந்தறிவு

கொண்ட விலங்கினமாக இருந்து நாம் எப்போது சிந்திக்க ஆரம்பித்தோமோ அப்போதே ஆறாம் அறிவான பகுத்தறிவைப் பெற்று மனித இனமாக மாறிவிட்டோம். மனித இனம் சற்றே உயர்ந்தும் விட்டது. உயர்ந்துவிட்ட மனிதன் உயர்ந்ததற்குக் காரணமாக இருந்த ஆறாம் அறிவைப் பயன்படுத்தாமல் இருந்தால் மீண்டும் நாம் விலங்கினமாக மாறிவிடுவோம். இந்த மண்ணுலகில் அறம் தழைக்க வேண்டுமெனில் மனிதன் நல்ல கருத்துக்களைச் சிந்திக்க வேண்டுமென்று கவிஞர் வெள்ளியங்காட்டான் விருப்பப்படுகிறார். அவ்விருப்பம் அவருக்குள் இருந்த மனிதத்தைக் கவிதை வரிகளாக வெளிக்கொணர்ந்துள்ளது.

**அடுத்தவரைச் சுரண்டிப் பிழைப்பது ஒரு பிழைப்பா?**

தம் முன்னோர்கள் சேர்த்து வைத்த செல்வத்தைச் செலவழித்து வாழ்வது பெருமை அல்ல. தன் உழைப்பால் பொருள்தேடித் தான் பெற்ற செல்வத்தால் இல்லறத்தை நடத்துவதுதான் ஆண்மைக்கு அழகு என்று தலைவிக்கு எடுத்துக் கூறித் தலைவன் பொருள்தேடச் சென்றான் என்பதை,

> **“உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**
> **இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச்**
> **சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்**
> **சென்றனர் வாழி தோழி” (குறுந்.283)**

எனும் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன. ஆக, உழைத்து வாழ்வதே வாழ்க்கை என்று இருந்தவர்களிடம் ஒரு கூட்டம் சுரண்டிப் பிழைத்திருக்கிறது. அக்கூட்டத்தைப் பார்த்து உழைத்து வாழ வேண்டும் பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே என்கிறார் கவிஞர்.

> **“நல்ல வழிகளில் செல்லவே**
> **என் மனம் நாடுது**
> **……………………………**
> **அவனை, யிவனைச் சுரண்டும்**
> **பிழைப்பை வெறுக்குது” (நாட்டம், ப.165)**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அற வழியில் வாழ வேண்டும். மனம்போன போக்கிலும் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பதுவும் வாழ்க்கை அல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு வரையறையை முன்னோர்கள் நமக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அத்தகைய அறவழியில் வாழ்வதே மனிதத்தன்மை. அதைவிடுத்து அடுத்தவரைச் சுரண்டிப் பிழைக்கும் பிழைப்பைக் கவிஞர் வெறுக்கிறார். வலியவன் எளியவனின் உழைப்பை, உடைமையை, உரிமையைச் சுரண்டுவதையே ஒரு பிழைப்பாக வைத்திருப்பவரைக் கண்டு சினம் கொள்கிறார். இச்சினத்தை எழுத்துக்களின்வழி கவிதையாகப் பதிவு செய்திருக்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான். இவ்வரிகள் கவிஞர் வெள்ளியங்கட்டானின் மனிதப் பண்பினைக் காட்டுகின்றன.

**சமத்துவ வாழ்வு**

> **“சாதியும் சமயமும் சாமியும் நீங்கிய**
> **சமத்துவ வாழ்வினிலே - நாம்**
> **நீதியில் நிலைத்தொரு பேதமு மின்று**
> **நிறைந்தினி வாழ்ந்திடவே” (அறிவு, ப.169)**

சாதி, சமயம், சாமி என்ற பெயரால் மக்களை முட்டாளாக்கி சிலர் அவர்களுடைய குடும்பத்தோடு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். இதைப் புரிந்துகொள்ளாத சிலர் சாதிக்கும் சமயத்திற்கும் சாமிக்கும் இரையாகி விழுந்து விடுகிறார்கள். இதைக் கண்டுணர்ந்த மனிதமுள்ள கவிஞர் வெள்ளியங்காட்டான் இல்லாத ஒன்றைப் பற்றிக் கொண்டு ஏற்றத்தாழ்வோடு வாழ்பவர்களைத் தன் அறிவாற்றலால் நல்வழிப்படுத்தி வாழவைக்க வேண்டும். ஏற்றத்தாழ்வை வேரறுக்க வேண்டும் என எண்ணுகிறார். இத்தன்மை சாக்ரடீசுக்கும் இருந்திருக்கிறது. “அந்தக் காலத்தில் மதம், அரசு இரண்டையும் அப்படியே ஏற்றுக் கொள்வது கிரேக்கர்களின் மரபு. சாக்ரடீஸ் அதை முதலில் உடைக்க விரும்பினார். விவாதங்கள், தத்துவங்களை அள்ளித் தெளிப்பார். கடவுளை

அவர் மறுக்கவில்லை என்றாலும், கடவுள் பெயரால் நடைபெறும் மூடத்தனங்களை எதிர்த்தார். ஆட்சியாளர்களின் அநியாயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டினார்" என்பார் எஸ்.கே முருகன் (2023:16). மனிதப் பண்புள்ள ஒவ்வொரு மனிதனும் இதைத்தான் செய்ய நினைப்பான். இத்தகைய சாதி, சமயமற்ற சமத்துவ வாழ்வைத்தான் கவிஞர் வெள்ளியங்கட்டானும் தன் எழுத்துக்களின்வழி பதிவு செய்திருக்கிறார். அதனால் மனிதனாய் இன்றும் நம்மால் அவர் புகழப்படுகிறார், போற்றப்படுகிறார்.

**மனித வாழ்வு மேன்மை அடைய வேண்டும்**

**"பச்சைப் பயிரினம் முற்றிப் பயன்படும்**
**பான்மையைப் போல் மனிதன் - பலரும்**
**மெச்ச வாழ்ந்துயிர் மேன்மை யடைவதே**
**மெய்யின் மிகு பயனாம்" (நாணயம், ப.170)**

மண்ணில் விதைக்கின்ற ஒவ்வொரு விதையும் பயிரினமாக முளையிட்டு வளர்ந்து முற்றி நல்விளைச்சலைத் தந்து பயனளிக்கிறது. அதைப்போல ஒவ்வொரு தனிமனிதனும் நல்ல செயல்களைச் செய்து மனித இனத்தில் மேன்மை அடைய வேண்டும். அதுவே சிறந்த பயனாக அமையும் என்கிறார் கவிஞர்.

**ஆசைக்கு அடிபணியாத மனித வாழ்வு**

ஒரு சமூகத்தின் பின்புலம், அதன் கட்டமைப்பு, பழக்கவழக்கங்கள், பண்பாடு ஆகியவை தனிமனித வாழ்வியலை மையப்படுத்தியும், முன்னிறுத்தியும் சுற்றிச் சுழல்கின்றன. அதே சமயத்தில் தனி மனிதனின் ஒழுக்கம் தடம் மாறும்போது ஒட்டுமொத்த சமூகத்தின் வாழ்வியல் கேள்விக்குறியாகிறது. இந்நிகழ்வுகள் எதிர்கால சந்ததிகளின் வாழ்வியலைச் சிதைத்துச் சீர்குலைத்து விடும் என்று எச்சரிக்கை செய்தவர்கள் நம் தமிழ்ச் சான்றோர்கள். அச்சான்றோர்களில் கவிஞர் வெள்ளியங்காட்டானும் ஒருவர் என்பதை,

**"புத்தி மிக்கவர் புவியில் உள்ள - பைம்**
**பொன்னைக் காட்டி லும்தன்**
**நித்தம் தன்மதிப் பென்னு மிதனையே**
**நெஞ்சில் பேணி வைப்பார்" (தன்மதிப்பு, ப.171)**

அறிவுடைய மனிதர்கள் எவ்வளவு பொன்னைக் காட்டி ஆசையை வளர்த்தாலும் தவறான செயல்களில் ஈடுபட மாட்டார்கள். தன் மதிப்பையே பெரிதென நெஞ்சில் நினைத்துத் தவறு செய்ய மாட்டார்கள். நல்லவர்களாக வாழ்வார்கள் என்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான். இதே கருத்தைத்தான் நீதிவெண்பா என்னும் நூலும் மூதுரையும் தெளிவுபடுத்துகின்றன.

பொன், கரும்பு, பால், சந்தனம் என்னும் இந்நான்கு பொருள்களையும் உருக்குலைந்து வருந்தும்படி துன்புறுத்தினாலும், அவற்றின் இயல்பான ஒளி, இனிமை, சுவை, மணம் எனும் பண்புகளே மீண்டும் மிகுந்து நிற்கும். அவ்வாறே நல்லோர் பிறரால் எவ்வளவு துன்புற்றாலும் அவர்களுடைய நல்ல பண்புகள் மாறுவதே இல்லை நீதிவெண்பா என்னும் நூல்.

**பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்**
**சின்னம்பட வருத்தம் செய்தாலும் - முன்இருந்த**
**நற்குணமே தோன்றும், நலிந்தாலும் உத்தமர்பால்**
**நற்குணமே தோன்றும் நயந்து. (நீதிவெண்பா.65)**

மேலும், இதே கருத்தை மூதுரையும் தெளிவுபடுத்துகிறது.

**அட்டாலும் பால்சுவையில் குன்றாது; அளவளாய்**
**நட்டாலும் நண்பு அல்லார், நண்பு அல்லர்;**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும். (மூதுரை.4)**

ஆக ஆசையைத் துறந்த மனிதர்கள் எவ்வளவு பொன்னைக் காட்டி ஆசை வார்த்தை கூறினாலும் தவறான செயல்களில் ஈடுபட மாட்டார்கள். தன் மதிப்பைப் பெரிதாக மனதில் நினைத்துத் தவறு செய்ய மாட்டார்கள் என்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான்.

**அடிமையாக மாட்டேன்**

**"அடிமை யாக மாட்டேன் - எவர்க்கும்**
**அடிமை யாக மாட்டேன்**
**அடிமை யென்ற ழைத்தே - என்னை**
**அடிமை செய்த போதும்**
**அடிமை யாக மாட்டேன் - எவர்க்கும்**
**அடிமை யாக மாட்டேன்**
**குடிமை குன்றி நாளும் - பழைய**
**கூழ் குடித்த போதும்**
**…………………………**
**மடமை கொண்டு வந்தென் - உரிமை**
**மறுதலித்த போதும்**
**…………………………**
**கொடுமை கோடி செய்து - என்னைக்**
**கொன்று விட்ட போதும்**
**அடிமை யாக மாட்டேன் - எவர்க்கும்**
**அடிமை யாக மாட்டேன்"          (அடிமையாக மாட்டேன், ப.72)**

என்று தன் உரிமைக் குரலை உரக்கக் கூறுகிறார். கவிஞரின் இந்த வரிகள் மக்களின் மனத்தைத் தட்டி எழுப்பக் கூடியதாக உள்ளன. நீங்கள் என்னை அடிமையென்று முத்திரை குத்தி அழைத்தாலும், குடிப்பதற்குப் பழைய கூழ் மட்டுமே இருந்தாலும், என் உரிமை மறுக்கப்பட்டாலும், எனக்கு எவ்வளவு கொடுமைகள் செய்தாலும் எவர்க்கும் நான் அடிமையில்லை என்பதை உரக்கக் கூறும் கவிஞரின் வரிகள் மனித மனத்தில் பட்டென்று பதிகிறது. கவிஞர் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் இவர் பார்ப்பனியத்தைப் படித்திருப்பார் போலும்.

**"நான் உனக்கொரு**
**அடிமையைத் தருகிறேன்**
**நீ எனக்கு**
**அடிமையாக இரு" (பார்ப்பனியம்)**

இச்சிந்தனையில் கவிஞருக்குக் கொஞ்சமும் உடன்பாடில்லை. ஏனென்றால் அந்தப் பார்ப்பனியம் கொடிய விசக்கருத்துக்களை மனித மனங்களில் விதைத்துக் கொண்டிருக்கிறது. மனித இனத்தை அடிமையாக்குவதற்குச் சாதி என்ற ஒன்றை ஏற்படுத்தி மக்களின் மனங்களைப் பிளவுபடுத்தி ஆள நினைக்கிறது. அதை முற்றிலுமாக கவிஞர் வெறுத்திருக்கிறார். அப்படி வெறுப்பதற்கானக் காரணம் அண்ணல் அம்பேத்காரைப் படித்திருப்பார் போலும்.

**"நான் யாருக்கும் அடிமை இல்லை**
**எனக்கு யாரும் அடிமை இல்லை" (அண்ணல் அம்பேத்கர்)**

என்ற கருத்து கவிஞரின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கின்ற காரணத்தால் அடிமையாக மாட்டேன் எவர்க்கும் நான் அடிமையாக மாட்டேன் என்ற மக்களின் கருத்தைத் தன் வரிகளில் அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்திருக்கிறார்.

**தீண்டாமையற்ற வாழ்வு**

**"பாட்டாளி மக்களைப் பட்டினி போடும்**
**பகாசுரக் குப்பைகளைக் கூட்டியெறி**
**……………………………………………**

**தோட்டந் தொடியில் தொழும்பர்க ளாகித்**
**தொழில்புரி வோர்களைத் தொட்டுவிடின்**
**தீட்டெனச் செப்பித் தீண்டாமை திணிக்கிற**
**தேறலர் குப்பையைக் கூட்டியெறி" (கூட்டியெறி, பக்.75-76)**

கூலி வேலை செய்யும் ஏழை எளிய மக்களின் வியர்வையையும் இரத்தத்தையும் உறிஞ்சி வாழுகின்ற முதலாளித்துவத்தை அரக்கர் இனம் என்றும் அவர்களைக் குப்பைகளென எண்ணிக் கூட்டியெறிய வேண்டும் எனவும் சூளுரைக்கிறார். மேலும், அதே கவிதையில் கூலித் தொழில் செய்வோர் தொட்டுவிட்டால் தீட்டெனச் சொல்லி அவர்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து தெளிவு இல்லாதவர்கள், அவர்களைக் குப்பைகளென எண்ணிக் கூட்டியெறிய வேண்டும். இல்லையேல் நாடு குப்பையாகி விடும் என்கிறார்.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனைத் தீண்டத்தகாதவனாகப் பார்ப்பது எவ்வளவு பெரிய குற்றம். அக்குற்றம் செய்பவரைத் தட்டிக் கேட்கும் நல்ல மனம் படைத்தவராகக் கவிஞர் இருந்திருக்கிறார்.

1955 ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் என்ன பயன்? இன்றும் தீண்டாமை இருந்து கொண்டேதான் இருக்கிறது. அதை அறவே வெறுக்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான். "தீண்டாமை என்ற சொல் அகராதியில் இருக்கும்வரையிலோ அல்லது பழக்கத்தில் கடைபிடித்து வரும் வரையிலோ ஒவ்வொரு இந்தியனும் அவமானத்தால் தலைகுனியத் தான் வேண்டும்" என்பார் மு.ஜகன்னாதன் (1957:6).

"தீண்டாமை என்பது நமக்கு ஒரு சாபத்தீடு. ஆதியிலும் சாதியிலும் தீண்டாமை இருந்ததில்லை. புரட்டர்களும், எத்தர்களும் கூடி ஏற்படுத்திய இத்தீய பழக்கத்தை அறவே ஒழித்துக் கட்டாது போனால் நாம் உண்மையில் சுதந்திர மனிதர்களாக மாட்டோம். சமத்துவம், சகோதரத்துவம் என்பதும் ஏற்படாது. புத்தம் புதிய இந்தியாவை உருவாக்குவதில் தீண்டாமை ஒழிப்புத்தான் முக்கிய இடம்பெற்றிருக்கிறது" (1957:7). "தீண்டாமையை அறவே நாம் நாட்டை விட்டு நீக்கினாலன்றி நம் உலகத்தின் நாகரிக மக்களோடு தலைநிமிர்ந்து நடக்க முடியாது" என்பார் மு.ஜகன்னாதன் (1957:7-8) தீண்டாமையும் அதனால் விளையும் கொடுமைகளையும் அநீதிகளையும் ஒழிப்பதற்கு அம்பேத்கர், ராமானுஜர், பாரதியார், பெரியார் போன்ற பலர் போராடியிருக்கிறார்கள். அந்த வரிசையில் கவிஞர் வெள்ளியங்கட்டானும் இணைகிறார் என்பதற்குக் கவிஞரின் கவிதைகள்தான் வாக்குமூலம்.

**"நாடும் நகரும் நன்றென் போமினி**
**நாயகர் நாமென்போம் நம்**
**வீடும் வெளியும் ஒன்றென் போமினி**
**வேற்றுமை போமென்போம்**
**நீயும் நானும் நேரென் போம் நன்**
**னெறிதனை நீங்காதே" (ஒன்றுபடல், ப.77)**

மனிதர்கள் மதம், இனம், மொழி, சாதி, கலாச்சாரம் ஆகியவற்றைக் கடந்து ஒற்றுமையாக வாழ வேண்டும். ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வு இல்லாமல் வாழ வேண்டும். அதிலும் நல்ல நெறியிலிருந்து பிறழாமல் வாழ வேண்டும். அதுவே மனித இனத்தின் மிக முக்கியமான பண்புகளில் ஒன்றாகும் என்பதை மேற்குறித்த பாடல் வரிகள் விளக்குகின்றன. இத்தகைய நல்ல எண்ணம் கொண்ட மனிதராகக் கவிஞர் வாழ்ந்திருக்கிறார்.

ஆனைகட்டிப் போரடித்து வாழ்ந்த மக்களை ஆட்சி என்னும் பெயரில் பூனையைப் போல் அடக்கி எல்லாத் தொழில்களையும் செய்யச் சொல்லி ஆண்டு கொண்டிருப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாத கவிஞர்,

**"ஆனை போன்ற அரும்பெரும் மக்களை**
**ஆட்சி யென்கிற அங்குசம் மாட்டியே**
**பூனை போன்றவ ராக்கி யொடிக்கினர்**
**புவியி லுள்ள தொழில்கள் புரியவே" (விளக்கம், ப.91)**

என்று மனிதத்தன்மையோடு கேள்வி கேட்கிறார்.

**சாதியற்ற வாழ்வு**

> **"சாதிக்குச் சாதி யுயர்வென்று சாற்றி**
> **சாத்திரம் சட்டம் சதிநிறை வேற்றி**
> **சூதுக்குள் ளாக்கிச் சுதந்திரம் தாழ்த்தி**
> **சூத்திரப் பட்டமும் சூட்டினர் வாழ்த்தி" (கோரிக்கை, ப.95)**

சாதிக்குள் சாதி உயர்வு தாழ்வு உண்டு என்பதை அறிந்து கொண்ட கவிஞர் பொங்கி எழுகிறார். யார் இந்தச் சாதியை உருவாக்கியது? 2000 ஆண்டுகளுக்கு முன்பு சாதி என்ற ஒரு சொல்லே இல்லாத போது இந்த அவலத்தை அரங்கேற்றியது யார்? என வெகுண்டு எழுகிறார். ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், கீழடி, பல்லாவரம், அத்திரம்பாக்கம், சித்தனவாசல், காவேரிப்பட்டினம், அரிக்கமேடு, பொருநை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பெற்ற தொல்லியல் அகழாய்வில் ஒரு இடத்தில் கூட சாதிக்கான அடையாளம் கிடைக்கவில்லை என்கிறார்கள் தொல்லியல் அறிஞர்கள். அப்படி இருக்கையில் இந்தச் சாதியை உருவாக்கியது யார்? சத்திரியர், சூத்திரர் என்று சாதியைத் திட்டமிட்டு உருவாக்கி ஒருவரை உயர்த்தி மற்றொருவரை அடிமைப்படுத்தியது யார்?

தமிழர் "திராவிட பாசைகளைப் பேசிக்கொண்டு சுயாட்சியாய் நெடுங்கால மிருந்தனர். இத்திராவிடர் ஜாதிகுல வேறுபாடுகளற்றவர்களாய் ஒருவரோடொருவர் விவாகம் பிரிதி போசனம் முதலியவைகள் எவ்வித ஆசோபனையுமன்றி செய்துகொண்டும் பிரதேசங்களுக்குக் கப்பல் யாத்திரை சென்று வியாபார முதலியது செய்தும் கல்வியிற் சிறந்தவர்களாகவும் அதிக நாகரீகமுடையவர்களாகவுமிருந்தார்கள். இத்திராவிட ராஜ்ஜியங்களைப் பற்றி மனுதர்ம சாஸ்திரத்திலும் ஆரியர் புராணமாகிய ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சகோதரத்துவம் நிறைந்த சுகமாய் வாழ்ந்து வந்த நாட்டிற்கு ஆரியர் முதலில் யாத்திரைப் பிரயாணிகளாக வந்தனர். அவர்களுக்குத் திராவிடர் 'மிலேச்சர்' என்று பெயரிட்டனர். பண்டைக் காலத்து நிகண்டுகள், திவாகரம், பிங்கலந்தை முதலியவைகளில் 'ஆரியர்' என்பதற்கு 'மிலேச்சர்' எனறே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாரியர் அனுசரித்து வந்த ஆசாரங்களும் நடத்தைகளும் திராவிடர்களின் நடவடிக்கைகளுக்கு தாழ்ந்திருந்தமையால் அம்மாதிரி 'மிலேச்சர்' என்று பெயரிட்டிருக்க வேண்டும். மேலும், ஆரியருக்கு 'சுரர்' என்கிற ஒரு பெயர் உண்டு. அதன்பொருள் 'சுரா' சம்மந்தமுடையவர் எனப் புலப்படுகிறது. 'சுரா' என்பது கள், மது எனப் பல பொருள்கள் குறித்த ஒரு மொழியாதலால் 'சுரர்' என்பதற்குக் கள் குடியர் என்பதே பொருளாம். இவ்வாரியர்கள் குதிரை, ஆடு, மாடு முதலியவைகளைத் தின்பதுடன் சோமபான மென்னும் கட்குடித்தலு முடையவராதலினால் வைதீக கிரியை என்று யாகங்கள் செய்வதும், அவற்றுள் ஆடு, மாடு அசுவமாகிய இவைகளைப் பலியிட்டுப் புசிப்பதுமன்றி புருஷமேத யாகமென மனிதரையும் பலியிட்டு தின்று வந்தார்கள். இதனாலேதான் ஆரியருக்கு ஆதி காலத்தில் 'மிலேச்சர்' என்றும் 'சுரர்' என்றும் பூர்வகால நூலாசிரியர்கள் கூறியிருக்கின்றனர்.

தமிழகம் வந்துசேர்ந்து சுமார் 400, 500 வருஷங்களுக்குப் பின்னர் எழுதப்பட்ட தொல்காப்பியத்தில் ஆரியரைத் தாழ்மையாகக் கூறியிருக்கிறது.

> **"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி**
> **சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியோடு**
> **அளவில் மரபின் அறுவகை யோரும்**
> **களவினில் கிளவிக்கு உரியர் என்ப" (தொல்.செய்யுளி, நூற்.1445)**

"இவ்வாரிய பிராமணர்கள் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் மத்தியில் தாங்கள் நிற்பவர்களென்றும், அநேக வித மந்திரங்களைத் தெரிந்தவர்களென்றும் மனிதர்களுக்குத் தாங்கள் தேவர்களென்றும் தாங்கள் எதையும் செய்ய சக்தியுள்ளவர்களென்றும், நவக்கிரகங்கள் தாங்கள் சொல்லுகிறபடி நடக்க வேண்டியவைகளென்றும், வேண்டும்போது மழை பெய்யச்செய்ய சக்தியுள்ளவர்களென்றும் தமிழர்களைப் பலவகையில் பயமுறுத்தினார்கள்" என்பர் D.கோபால செட்டியார் (1920:13-14)

"தமிழரசர்களைக் கைவசப்படுத்திக்கொண்டு பலவித தந்திரங்கள் செய்து ஏமாற்றி குற்றமற்ற தமிழர்களைத் தங்களின் தீய ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்தனர். தமிழகத்தில் ஆரியரின் ஆசாரங்களையும் நடவடிக்கைகளையும் ஒற்றுக்கொள்ளாதவர் தாழ்ந்தவர் என்கிற கருத்தும் பரவியது" என்பார் D.கோபால செட்டியார் (1920:14-15).

ஆக, மேற்குறித்த கருத்தின்படி நாகரீக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த பூர்வ குடி தமிழர்களைத் திட்டமிட்டு சாதியைத் திணித்து அவர்களைத் தாழ்ந்த குடிகளாக்கி அடிமைப்படுத்தியிருக்கிறார்கள் ஆரியர்கள். இந்த ஆரியர்களின் அடிமைத்தனத்தை மனித இயல்புகள் கொண்ட கவிஞரால் ஏற்றுக்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்கிறார். 'தனிஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் கருத்தையும், மாற்றம் என்பது மானுடத் தத்துவம் மாறாது என்ற சொல்லைத் தவிர மற்றவை அனைத்தும் மாறிவிடும் என்ற கார்ல் மார்க்ஸின் சித்தாந்தத்தையும் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான். அதனால்தான் நூல் முழுவதும் பாதிப்புக்கு உள்ளான அடிமை மக்களின் உரிமைக் குரலாய்ப் பொதுவுடைமைச் சிந்தனைகள் நிரம்பி வழிகின்றன.

**துணைநின்றவை**

1. கோபால செட்டியார். D, 1920, ஆதி திராவிடர் பூர்வ சரித்திரம், கிரநதி - ராமஸ்வாமி செட்டியார் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது, சென்னை.
2. மணிகண்டன்.ய, 2002, நீதிவெண்பா, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் - 613 009,
3. முருகன். எஸ்.கே, 2023, விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 600 002
4. வேங்கடாசலம், 2007, மணிமேகலை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை - 600 014.
5. வேங்கடசாமி நாட்டார். ந.மு., 1927, மூதுரை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி & சென்னை.
6. ஜகன்னாதன். மு, 1957, தீண்டாமை ஒழிப்புச் சட்டம், ஜீவோதயம் அச்சகம், சென்னை - 600 005.
7. ஜகன்னாதன். மு, ஜீவாவின் பாடல்கள், 1962, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை - 600 098.
8. கார்த்திகேயன்.வீ.கே, 15.05.2017, https://iravie.com/%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BE%E0%AE%A9/
9. பிரேம்ஜான் சந்திரசேகரன், https://ta.quora.com/%E0%AE%AE%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AE%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D